# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU



ஜுமுஆ பேருரை

தலைப்பு :

அல்லாஹ்வின் அடையாளங்கள்

(பகுதி – 3)

27 MARCH 2020

(02 Shabaan 1441 AH )

ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ்

முனீர் அஹ்மது அஸீம் (அலை)


வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

Phone No :- 917502272774

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

# *The Signs of Allah* *(Pt.3)*

## *அல்லாஹ்வின் அடையாளங்கள் (பகுதி 3)*

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்துக்கொண்டு, தஷஹ்ஹுத், தஅவ்வூது

மற்றும் அல்.ஃ.பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜுமா பேருரையியை நிகழ்த்தினார்கள்.

நபிமார்கள் மற்றும் பிற நேர்மையான மக்கள் கூட சில நேரங்களில் சிரமங்களை சந்திக்க நேரிடும் என்பதை நான் புரிந்துக் கொள்கிறேன். ஆனால் அத்தகைய சிரமங்களுக்கு அவர்கள் ஆளாகுவது அவர்கள் செய்த பாவங்களால்தான் என்று நினைப்பது கடுமையான தவறாகிறது; பாவமாகிறது. நேர்மையான மற்றும் இறைவனுக்குப் பிரியமான மக்களுக்கும், பாவியான மற்றும் இறைவனுக்கு கீழ்ப்படியாத மக்களுக்கும் எதிர்கொள்ளும் பேரழிவுகளுக்கிடையே பெரிய வித்தியாசம் உள்ளது.

உண்மையுள்ள மக்களுக்கு வழங்கப்பட்ட பொறுமை இந்த பேரழிவுகளையும் சிரமங்களையும் இனிமையின் ஊற்றாக மாற்றுகிறது. அதில் அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். ஏனெனில் அது அவர்களை ஆன்மீக முன்னேற்றத்தை நோக்கி

அழைத்துச்செல்கிறது. அந்த சோதனைகளானது, அவர்களை ஆன்மீகத்தின் உன்னதமான நிலைக்கு கொண்டு செல்கின்றன. அது அவர்களுக்கு ஒரு ஏணிபோலாகும்.

இதுபோன்ற சோதனைகள் மற்றும் சிரமங்களைச் சந்திக்காத எவரும் ஒருபோதும் முன்னேற்றத்தை அடைய இயலாது. மறுபுறம் ஒருவரின் தீய செயல்களின் விளைவாக ஏற்படும் பேரழிவுகள் மற்றும் கஷ்டங்கள் உண்மையான பேரழிவுகளாகும். அது கோபத்தை உணர்த்தும் உண்மையான பேரழிவுகள், இது அவர் வாழ்க்கையை தாங்க முடியாததாக ஆக்குகிறது. அத்தகைய நபர் வாழ்வதற்கு எண்ணுவதற்குப் பதிலாக மரணத்தை விரும்புகிறார். ஆனால் நிச்சயமாக மரணம் அத்தகைய ஆபத்தான நிலைமையை முடிவுக்குக் கொண்டு வராது என்று அவருக்குத் தெரியாது. அவரைப் பொறுத்தவரை, அந்த நிலைமைகள் மறு உலகிலும் நிலவும். சுருக்கமாக, இந்த பேரழிவுகள் தொடர்பான இயற்கையின் சட்டத்தின்படி, அவனுடைய தீய செயல்களின் விளைவாக நிகழ்கின்றன. அது நபிமார்கள் மற்றும் உண்மையானவர்களுக்கு எதிர்கொள்ள வேண்டியவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டவையாகும். உண்மையில் அவை வழங்குவதன் நோக்கமானது அவர்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்காகும்.

இந்த நிகழ்வின் ரகசியத்தைப் புரிந்து கொள்ளாத அறிவற்றவர்கள், அதைப் பயன்படுத்தி, தங்கள் வாழ்கையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு பதிலாக, நபிமார்கள் மற்றும் தூதர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் விஷயங்களுடன் அவர்கள் அத்தகைய பாதைகளை இணைக்கத் தொடங்குகிறார்கள், எந்த ஒப்பீடும் இல்லை என்றாலும்! அறியாமை என்னும் நோய் எவ்வளவு தீவிரமானது.

துன்பப்படுபவர் ஒப்பிட முடியாத விஷயங்களை ஒப்பிடத் தொடங்குகிறார். நபிமார்கள் எதிர்கொள்ளும் சோதனைகளை சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் சோதனைகளுடன் ஒப்பிடுவது ஏமாற்றமாகும்; அதில் குறைந்ததல்ல. நபிமார்களும், அல்லாஹ்வின் மற்ற தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் அனுபவித்த சோதனைகள், அன்பின் அடையாளம் மட்டுமே என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஏனென்றால் அந்த சோதனைகளின் மூலம் இறைவன் அவர்களுக்கு ஆன்மீக உலகில் மிக உயர்ந்த பதவிகளை வழங்குகிறான்.

ஆனால் குற்றவாளிகள் இத்தகைய சோதனைகளை எதிர்கொள்ளும் போது, அது அவர்களை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் வருகிறது. இறை தண்டனை

பல சிறப்பியல்பு அம்சங்களைக் கொண்டுள்ளது, இது இயற்கை பேரழிவிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும்.

1. ஹஸ்ரத் நோவா நபி (அலை) அவர்களின் கதை இந்த விஷயத்தில் தெளிவான மற்றும் மேம்பட்ட உதாரணத்தை வழங்குகிறது. அந்த மக்கள் செய்த தீய செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்காவிட்டால், இறைத்தூதர் என்ற அவரது உரிமை கோரலை நிராகரிப்பதில் தொடர்ந்து ஈடுபட்டால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய பேரழிவைக்குறித்து அவர் தனது மக்களை எச்சரித்திருந்தார். மேலும் அதே மூச்சில், முன்னோடியில்லாத ஒரு பிரளயத்தால் அவர்கள் அழிந்துவிடுவார்கள் என்று அவர் எச்சரித்தார். தனது எச்சரிக்கையை அம்மக்களுக்கு விடுத்தபிறகு, நோவா (அலை) அவர்கள் இறைக் கட்டளைகளின்படி, உண்மையான நம்பிக்கையாளர்கள் காப்பாற்றப்படும் ஒரு கப்பலைக் கட்டத் தொடங்கினார். முடிவில், துரதிர்ஷ்டவசமான அந்த நாள் வந்தது. திருக்குர் - ஆனின் படி : **“இதன் காரணமாக நாம் வேகமாகக் கொட்டும் தண்ணீரைக் கொண்டு வானத்தின் வாயில்களைத் திறந்து விட்டோம். (54 : 12)**

ஒரு சில விவரங்களைத் தவிர, இந்த நிகழ்வு உலகின் மூன்று முக்கிய மதங்களான யூத மதம், கிறிஸ்தவ மதம் மற்றும் இஸ்லாம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2. இறைத் தண்டனையின் இரண்டாவது சிறப்பியல்பு என்னவென்றால், அது ஒரு குறிப்பிட்ட நிபந்தனைக்கு உட்பட்டதாக இருக்கும். இது பூமி அல்லது ஆகாயத்திற்குரிய பேரழிவின் நேரடி காரணம் அல்ல. இது சுயம் வெளிப்படுகிறது. சமூத் கோத்திரத்திற்கு அனுப்பப்பட்ட ஹஸ்ரத் சாலிஹ் (அலை) அவர்களின் காலத்தின்போது ஒரு பயங்கரமான வெடிப்பு ஏற்பட்டது. ஆனால் அந்த வெடிப்புக்கும், பெண் ஒட்டகத்தின் கால்களை துண்டித்தார்கள் என்பதற்கும் இடையே எந்த தொடர்பும் இல்லை.
3. மூன்றாவது அறிகுறி என்னவென்றால், இறைத் தண்டனையின் போது நம்பிக்கைக்கொண்ட மக்கள் காப்பாற்றப்படுகிறார்கள், நம்பிக்கை கொள்ளாத மக்கள் தண்டிக்கப்படுகிறார்கள். நீதிமான்கள் எந்த துரதிர்ஷ்டத்திற்கும் ஆளாகமாட்டார்கள் என்று அக்கால இறைத்தூதர் மிகத் தெளிவாக எச்சரித்தார். திருக்குர்-ஆன் சில தண்டனைகளைக் குறிப்பிடுகிறது. அவை நம்பிக்கையாளர்களையும் அவநம்பிக்கையாளர்களையும் தாக்கியுள்ளன.

இருப்பினும், இந்த தண்டனைகளானது விதிவிலக்குகள் மற்றும் வேறு நோக்கங்களுக்கு உட்பட்டவையாக அமைந்திருந்தன.

4. நான்காவது வித்தியாசம் என்னவென்றால், இறைத் தண்டனையின் பின்னர் நடைமுறையில் உள்ள தத்துவமும் வாழ்க்கை முறையும் மறைந்து போகின்றன அல்லது பூமியின் முகத்திலிருந்து முற்றிலும் அவை அழிக்கப்படுகின்றன. தொடர்ந்து புதிய கருத்தியல் வெற்றிகரமாக வெளிப்பட்டு மிக விரைவாக அது மகிமையின் உச்சத்தை அடைகிறது.
5. காலத்தின் பேரழிவிலிருந்து இறை தண்டனையை வேறுபடுத்தும் ஐந்தாவது பண்பு திருக் குர்-ஆனின் பின்வரும் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**“நாம் அவர்களுக்கு காட்டிய ஒவ்வொரு அடையாளமும், தனக்கு முன்னுள்ள அடையாளத்தை விடப் பெரிதாகவே இருந்தது. அவர்கள் (எம்மிடம்) திரும்புவதற்காக நாம் அவர்களைத் தண்டனையைக் கொண்டு பிடித்தோம். (43 : 49)**

வேறு வார்த்தைகளில் கூறுவோமேயானால், தண்டனையின் தீவிரம் படிப்படியாக அதிகரிக்கிறது மற்றும் இறுதி வெற்றி கிடைக்கும் வரை அத்தண்டனைகள் தொடர்ச்சியாக இறங்குகிறது. இறைத் தண்டனைகளின் தீவிரத்தின் பரிணாமத்தை அறிய நாம் ஒரு ஆய்வை மேற்கொண்டால், காலப்போக்கில் பேரழிவுகளின் தாக்கம் அதிகரிக்கிறது என்பதை நாம் காண்கின்றோம். அக்கால நபியின் தூதுச் செய்திகளை ஒரு மக்கள் நிராகரித்து, அழிவு முன்பே அறிவிக்கப்பட்டால், இறுதி இறைத் தண்டனை மிகவும் கடுமையான மற்றும் தீர்க்கமான வடிவத்தில் இறங்குகிறது. இத்தகைய பேரழிவின் தீவிரம், சாதாரண பேரழிகளைப் போல அல்ல.

6. ஆறாவது வித்தியாசம் என்னவென்றால், சாதாரண பேரழிவுகள் மனித இதயத்தின் நிலையால் பாதிக்கப்படுவதில்லை. இது மன உளைவு மற்றும் பச்சாதாபம் போன்ற உணர்வுகள் எழுந்து பாவ மன்னிப்பு கேட்க விருப்பம் இருந்தால், பின்னர் இறை தண்டனை நிராகரிக்கப்படுகிறது.

**“ஆனால், நீர் அவர்களுக்கிடையில் இருக்கும் நிலையில் அல்லாஹ் அவர்களுக்குத் தண்டனையளிக்கமாட்டான். அவர்கள் பாவமன்னிப்புக் கோரிக் கொண்டிருக்கின்ற நிலையிலும் அல்லாஹ் அவர்களுக்கு தண்டனையளிக்கமாட்டான்” (8 : 34)**

ஹஸ்ரத் யூனுஸ் நபி (அலை) அவர்களின் காலத்தில் இந்த தத்துவத்தின் ஒரு சிறந்த உதாரணம் நம்மிடம் உள்ளது.

7. ஏழாவது வித்தியாசம் என்னவென்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட நபி அந்த இடத்தை விட்டு வெளியேறும் வரை தண்டனை இறங்காது. உதாரணமாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி அல்லாஹ் கூறுகிறான்.

"ஆனால், நீர் அவர்களுக்கிடையில் இருக்கும் நிலையில் அல்லாஹ் அவர்களுக்கு தண்டனையளிக்கமாட்டான். அவர்கள் பாவமன்னிப்புக் கோரிக் கொண்டிருக்கின்ற நிலையிலும் அல்லாஹ் அவர்களுக்கு தண்டனையளிக்கமாட்டான்" (8 : 34)

நல்லொழுக்கமுள்ளவர்கள் அந்த இடத்தை விட்டு வெளியேறிய பிறகு தோன்றும் பேரழிவுகள்தான் இறைத் தண்டனைகள். உயிர்வாழும் வழிகளை பின்பற்ற முடியாத வகையான பேரழிவுகளும் உள்ளன. அவ்வாறிருந்தாலும் நல்லொழுக்கமுள்ளவர்கள் தண்டிக்கப்படுவதில்லை. வரவிருக்கும் பேரழிவு குறித்து நபிமார்கள் எச்சரிக்கப்படுகிறார்கள், மேலும் சில தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க இறைவன் அவர்களுக்கு கட்டளையிடுகிறான். மறுபுறம் எதிராளிகள் கூட இத்தகைய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்கள். இருப்பினும், அத்தகைய பேரழிவுகளிலிருந்து அவர்களுக்கு தப்பிக்கொள்ள முடியாது. நபிமார்களும் அவருடைய தோழர்களும் இறை சக்தியால், இத்தகைய தண்டனையிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள். அது அறிவற்றவர்களையும் அவநம்பிக்கையாளர்களையும் வியக்க வைக்கும் ஒரு அதிசய சக்தியாக வருகிறது. ஹஸ்ரத் மோசஸ் (அலை) அவர்களின் காலத்தில் இஸ்ரவேலின் குழந்தைகளுக்கு ஒரு தடுப்பு நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டது. அதாவது புளிப்பு ரொட்டி மீதான தடை உத்தரவு. அது மட்டுமல்ல ஒரு தொற்று நோயைத் தடுக்க தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க பார்வோனின் மக்களுக்கு முழு சுதந்திரம் இருந்தது. சில நோய் அங்கு பரவ ஆரம்பித்தது. பார்வோனின் மக்கள் மட்டுமே அத்தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டார்கள், மோசஸ் (அலை) அவர்களை பின்பற்றுபவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

வாக்களிப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் இதே போன்ற ஒரு உதாரணம் இருந்தது. அதாவது அங்கு பிளேக் தோன்றியது.

இந்த நூற்றாண்டிலும், உலகின் பல்வேறு நாடுகளில் வெள்ள பெருக்கம் மற்றும் சூறாவளிகள் போன்ற பல இயற்கை பேரழிவுகளை காணலாம். பூகம்பங்கள் மற்றும் நிலச்சரிவுகள் உள்ளன. மேலும் சிக்குன் குனியா, மேட்-கவ், ஆவின் வைரஸ், H7N3H

வைரஸ், H1N2 வைரஸ் போன்ற நோய்கள் உள்ளன. சார்ஸ் மற்றும் இப்போது ஒரு புதிய வைரஸ். இது ஒரு புதிய வகை கொரோனா வைரஸ, கோவிட் - 19 என்று அதற்கு பெயரிடப்பட்டுள்ளது. இது சீனாவில் முதல்முறையாக டிசம்பர் 2019 –ல் தோன்றியது. கோவிட் - 19, சார்ஸ் (முன்னோடியில்லாத வைரஸ்) இதுவும் 2002 – 2003 ஆண்டில் சீனாவில் தோன்றியது.

(பேருரையின் போது, இறைவெளிப்பாட்டின் தொடக்கத்திலிருந்து ஜமா அத்தே அஹ்மதியா அல் முஸ்லீமின் உறுப்பினர்கள், எனது பிரசங்கம் மற்றும் ஆய்வு வட்டங்களிலும் வைத்து நான் பெற்ற வெளிப்பாடுகளுக்கு சாட்சியம் அளித்தனர் என்பதை ஹுஸுர் அவர்கள் வலியுறுத்தி கூறினார். மேலும் அவர்கள் அவற்றை எழுதி வைத்தனர். இப்போது அவை அனைத்தும் நடக்கின்றன. அந்த நேரத்தில் கூட அதாவது இந்த நூற்றாண்டின் இறைவெளிப்பாட்டின் ஆரம்பத்தில் கூட (2002 – 2003) சார்ஸ் வைரஸ் சீனாவில் தோன்றியது. மனித குலம் ஆபத்தில் உள்ளது என்று அல்லாஹ்விடமிருந்து அவர் பெற்ற இறைவெளிப்பாடுகளின்படி ஹுஸுர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இந்த வைரஸால் சீனா உண்மையில் உலகை முடக்கியுள்ளது.இது மனித குலத்தை அழிக்கும் நோக்கத்துடன் தோன்றிய வைரஸ். அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையாக உள்ளது. ஏனென்றால், மனிதனுக்கு நேரிடும் பேரழிவு அனைத்தும் அவனது கைகள் கொண்டு வந்தவை என்று அவன் கூறுகிறான். ***** உலகை அழிப்பதற்கும், மனித குலத்தை தனது முழங்கால்களுக்கு கொண்டு வருவதற்கும், அத்தகைய ஆயுதங்களை கண்டுபிடிப்பதற்காக சீனர்களின் சதிகளைப் பற்றி அல்லாஹ் ஹுஸுருக்கு அறிவித்ததிலிருந்தது***)**

இன்றுவரை, கோவிட் - 19 யால் பாதிக்கப்பட்டவர்கள் 5,32,263 அதில் 24,090 பேர் உயிரிழந்தனர். மொரீஷியஸில் இப்போது 2 இறப்புகள் உட்பட அதிகாரப் பூர்வமாக 81 –பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சர்வவல்லமையுள்ள இறைவன் எனக்கு அறிவித்துள்ளான் பூகம்பங்கள், வெள்ளபெருக்கம், நிலச்சரிவுகள், கொடிய வைரஸ்கள், விமான விபத்துகள், சூறாவளிகள், ரத்தவெறி கொண்ட போர்கள் போன்ற பெரிய அழிவுகள் மிக நீண்ட காலமாக நிகழ்ந்து வருகின்றன. மூன்றாம் உலகப்போர் வெகுதொலைவில் இல்லை. இனப்போர்கள் உலகின் நான்கு மூலைகளையும் பாதிக்கும். மொரீஷியஸ் மற்றும் பிற தீவுகள் கூட இதிலிருந்து விலகி இருக்காது. அதன் விளைவாக இழப்புகள் மற்றும்

இரத்த ஆறுகள் ஓடும் நிலை உருவாகும். விலங்குகளையும், பறவைகளையும் கூட காப்பாற்ற முடியாது. மனிதனைப் படைத்ததிலிருந்து இது ஒருபோதும் நிகழாததால் இது போன்ற அழிவு தோன்றும். பெரும்பாலான வீடுகள் ஒருபோதும் அங்கு இல்லாததுபோல் அழிக்கப்படும். பல்வேறு வடிவங்களின் பிற துன்பங்கள் பூமியிலும் ஆகாயத்திலும் தோன்றும், மேலும் அவை அசாதாரணமானவை என்பதை மக்கள் அங்கீகரிப்பார்கள். தத்துவம் அல்லது வானியல் பற்றிய புத்தகங்களில் இது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

மனித குலம் மிகவும் கலக்கமடைந்து அவர்களுக்கு என்ன நடக்கிறது என்று எண்ணி ஆச்சரியப்படுவார்கள். பலர் காப்பாற்றப்படுவார்கள். ஆனால் பலர் அழிக்கப்படுவார்கள். இறுதி நாளின் காட்சிகள், பூகம்பங்கள் ஒருபுறம், மற்ற திகிலூட்டும் துன்பங்கள் மறுபுறம் தோன்றும், சில வானத்திலிருந்து வரும் மற்றும் சில பூமியிலிருந்து வரும். அதற்கு உலகம் சாட்சியாக இருக்கும். அந்த நாட்கள் மிக அருகில் அல்லது வாசலில் உள்ளன.

**மனிதன் உண்மையான இறைவனை வணங்குவதை நிறுத்திவிட்டதால் இவை அனைத்தும் நிகழும். அவனுடைய கவனமெல்லாம் நம் உலகில் செலுத்தியிருக்கிறான். நான் தோன்றாவிட்டால், இந்த துன்பங்கள் ஓரளவு தாமதமாகியிருக்கும். ஆனால் நான் தோன்றியிருக்கிறேன். ஆகவே கோபமான இறைவனின் நோக்கம் ஒரு நீண்ட காலத்திற்குப் பிறகு தெளிவாகத் தெரிகிறது,** அவன் கூறியது போல **“நாம் எந்தச் சமுதாயத்திற்கும், அவர்களிடம் ஒரு தூதரை அனுப்பாதவரை ஒரு போதும் ஆக்கினையை அனுப்புவதில்லை”** (17 : 16)

(இந்த வெளிப்பாடுகள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்டதாக ஹுஸூர் அவர்கள் குறிப்பிட்டார், இப்போது இந்த நூற்றாண்டில், மனித குலத்தை எச்சரிக்க மீண்டும் அந்த வெளிப்பாடுகள் வருகின்றன.)

மனந்திரும்புகிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள், ஒரு துன்பம் அவர்களை அடைவதற்குள் இறைவனை அஞ்சுகின்றவர்களுக்கு இரக்கம் வழங்கப்படும்.

**இறைத் தண்டனையிலிருந்து நீங்கள் பாதுகாப்பாக இருப்பீர்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா? மிக கடுமையான துன்பங்கள் கூட உங்களை வந்தடைய உள்ளன**

**என்று நான் அஞ்சுகிறேன். மனந்திரும்பிய இதயத்துடன் ஏக இறைவனிடம் வருபவரைத் தவிர வேறு யாரும் பாதுகாப்பாக இல்லை.**

**உங்கள் கற்பனையில் உள்ள எந்த கடவுளும் உங்களுக்கு உதவ முடியாது. நகரங்களும் குடியிருப்புகளும் இடிந்து விழுவதை நான் காண்கிறேன். ஏக இறைவன் சிறிய நேரம் அமைதியாக இருந்தான். அவனது கண்களுக்கு முன்பாக மிக குற்றமான செயல்கள் செய்யப்பட்டன, அவன் அமைதியாக இருந்தான். ஆனால் இப்போது அவன் ஒரு திகிலூட்டும் முகத்தைக் காட்டப்போகிறான். காதுகளைக் கொண்டவர்கள் நேரம் வெகு தொலைவில் இல்லை என்பதைக் கேட்கட்டும். அனைவரையும் இறைவனின் கீழ் ஒன்றிணைக்க நான் முயற்சித்தேன். ஆனால் இறைவனின் கட்டளைகள் நிச்சயமாக நிறைவேற்றப்படும். நோவாவின் நாட்களை நீங்கள் காண்பீர்கள். அந்த நாட்கள் ஏற்கனவே உங்களுக்கு வந்துவிட்டன, இது ஒரு ஆரம்பம். இந்த உலகத்தை அழிக்கும் மற்ற, மிகவும் கடுமையான பேரழிவுகள் உள்ளன. மேலும் ஏராளமான தேசங்கள் அனுபவித்த தருணங்களை உங்கள் கண்கள் பார்வையிடும். ஆனால் இறைவன் தனது கோபத்தை அடக்கி, மெதுவாகவும் அமைதியாகவும் இருக்கின்றான்; மனிதர்கள் மனந்திரும்புவதற்கு அவன் சிறிய நேரம் வழங்குகின்றான்.**

ஆகவே, உங்களுக்கு இறைவனின் இரக்கம் கிடைக்கும்படி மனந்திரும்புங்கள். இறைவனைக் கைவிடுகிறவன் ஒரு புழு, அவர் மனிதன் அல்ல, இறைவனுக்கு அஞ்சாதவன் ஒரு சடலம், அவர் உயிர் உள்ளவர் அல்ல.

**நான் எனது பேருரையை இங்கே முடித்துவிட்டு, எல்லாம் வல்ல, ஆற்றல்மிக்க ஏக இறைவனிடம் திரும்பி, அவனுடன் மன்னிப்பைக் கோர பூமியிலுள்ள அனைத்து மக்களுக்கும், எல்லா முஸ்லீம்களுக்கும் நான் அறிவுறுத்துகிறேன். நான் உங்களுக்குச் சொல்வதைக் கேளுங்கள். உங்களை சரியான பாதையில், ஏக இறைவனிடம் கொண்டு செல்லும் பாதையில் உங்களை வழிநடத்த நான் வந்திருக்கிறேன்.**

அல்லாஹ் உங்கள் இதயத்தைத் திறந்து இந்த உண்மையை உங்களைப் பார்க்க வைப்பானாக! இந்த உண்மையை நீங்கள் இருளில் மறைத்துவிடாதீர்கள், இந்த சூழ்நிலையில் அவரது நோயை யாரும் மறைக்க முடியாது. ஒருவர் நோய்வாய்ப்பட்டால் மருத்துவமனைக்கு அல்லது மருந்தகத்திற்கு விரைந்துச் செல்கிறார். இதனால் அவருக்கு எந்த தீங்கும் மருத்துவ ரீதியாக வராது. ஆனால் நாம் வாழும் இக்காலம் மிகவும் தீவிரமானது என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே இதுபோன்ற சூழ்நிலைகளுக்கு

சாட்சியம் அளித்த பிறகும் நீங்கள் உங்களின் அதே நிலையில்தான் இருப்பீர்கள் என்று கூறாதீர்கள். உண்மை உங்களிடம் வந்து விட்டது. அதிலிருந்து நீங்கள் முகம் திரும்பிச் செலகிறீர்கள் இதனால் உங்களுக்கு செய்தியை எட்டவைப்பதைத் தவிர உங்களுக்காக எங்களுக்கு வேறு எதையும் செய்ய முடியாது. தீங்கு உங்களுக்கு நேர்ந்தால், அதற்கான குற்றம் உங்களுக்கு மட்டுமே என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் ஒவ்வொருவரும் படைப்பாளனுக்கு முன்பாக கணக்கு கொடுக்க வேண்டும். அல்லாஹ் உங்கள் இதயங்களைத் திறந்து, மனந்திரும்பி அவனிடம் மட்டும் திரும்புவதற்கான ஆற்றலையும், நேரத்தின் தேவையையும் காண்பிப்பானாக! ஆமீன் சும்ம ஆமீன்.

இன்று காலை அல்லாஹ்விடமிருந்து நான் பெற்ற வெளிப்பாடுகளை இப்போது உங்கள் முன் வைக்கிறேன். இந்த பிரசங்கத்தின் போது அதன் கருத்து வர்ணனைகள் மற்றும் விளக்கங்களை நான் ஏற்கனவே கொடுத்துள்ளதால் அதைப் பற்றி சுருக்கமாக கூறுகிறேன்.

## REVELATIONS

## இறைவெளிப்பாடுகள்

**27 March 2020**

பிஸ்மில்லாஹி ரஹ்மானிர் ரஹீம்

**சலாதுல் தஹஜ்ஜுத்துக்கு பிறகு (சுமார் 04.20 மணி)**

ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் (அலை) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுகைக்குப் பிறகு உலகத்தை அழித்து வரும் கொரோனா வைரஸ் மற்றும் அது அனைத்து மக்களும் ஏற்படுத்தும் துன்பங்களை நீக்கும்படியும் இந்த பேரழிவிலிருந்து மனித குலத்தை காப்பாற்றும்படியும் துஆவில் ஈடுபட்டிருந்தபோது, அதே நேரத்தில், ஒவ்வொருமுறையும் துஆக்கள் வெளியே வருவதற்கு பதிலாக ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் அந்நேரம் அல்லாஹ்விடமிருந்து பெற்ற பின்வரும் வசனங்கள் தான் வெளிவந்துக் கொண்டிருந்தது.

**அஹ்ஸிப அன்னாஸு அன் யத்ரகு அன் யக்குலூ ஆமன்னா வஹும் லா யக்துன்னூன்**

**நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று கூறுவதனால், அவர்கள் விட்டு விடப்படுவார்களென்றும் அவர்கள் சோதனைக்கு ஆளாக்கப்படமாட்டார்களென்றும் மக்கள் எண்ணுகின்றனரா?**

**ஹுஸ்ர் (அலை) அவர்களின் விளக்கம் :** அவர்களுக்கு நம்பிக்கை இருப்பதாக காட்டுகின்றனர். அவ்வாறு சொல்லும் மக்களிடம் அல்லாஹ், இதனால் மட்டும் நாம் அவர்களை சோதிக்க வேண்டாமா? ஒரு வகுப்பில் பயலும் குழந்தையைப் போல் அதாவது ஒரு குழந்தை தனது வகுப்பில் ஆர்வம் காட்டுகிறது மற்றும் பாடங்களைப் புரிந்து கொள்கிறது என்பதற்கான அறிகுறிகளைக் காட்டுகிறது. ஆனால், உண்மையில் அக்குழந்தை புரிந்து கொண்டதா என்பதை அறிய ஆசிரியர் ஒரு சோதனை (பரீட்சை) செய்ய வேண்டாமா? உங்கள் அன்றாட வாழ்கையில் கூட, நாம் பல்வேறு வகையான சோதனைகளை கடந்து செல்கிறோம். மேலும் அல்லாஹ் நம்மை இறுதித் தேர்வில் செல்ல வைக்கிறான். ஆனால் குழந்தையைப் பொறுத்தவரை, ஆசிரியர் அக்குழந்தை புரிந்து கொண்டது என்பதை உறுதிப்படுத்தவும், அந்த ஆர்வமும் புரிதலும் உண்மையிலேயே உண்மையுள்ளவையா, அல்லது அக்குழந்தை ஆசிரியரையும் தனது பெற்றோரையும் முட்டாளாக்கிக் கொண்டிருந்ததா என்பதை உறுதிப்படுத்தவும் அவர் சோதிக்கிறார். அதைப்போல், எல்லாவற்றையும் அறிந்திருந்தாலும் விசுவாசிகளின் நம்பிக்கையின் அளவையும் அவர்கள் காட்டும் நம்பிக்கையையும் அறிந்துகொள்ளவும், குறிப்பாக இந்த சோதனை காலங்களில் எல்லாம்வல்ல அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை அது உண்மையானதா இல்லையா என்பதை அறிந்து கொள்ளவும் அவன் சோதிக்கிறான்.

**வலக்கத் பத்தஅனல்லதீன மின் கப்லி ஹிம் பல் யஅலமுன அல்லாஹுல்லாதீனா ஸதக்கு வல் யதுலமுன அல் காதிபீன்**

**அவர்களுக்கு முன்னிருந்தவர்களை நாம் சோதித்தோம். எனவே இப்பொழுதும் நிச்சயமாக அல்லாஹ் உண்மையாளர்களை வெளிப்படுத்துவான். மேலும் பொய்யர்களையும் நிச்சயமாக அவன் வெளிப்படுத்துவான்.**

**அம்ஹாசிபல்லதீனா யாமால்லுன்னாஸ் செய்யாத்தி அய்யாஸிபிகுனா? சாஆமா யாக்குமூன்**

**அல்லது தீய செயல்களைச் செய்பவர்கள் எம்மை விட்டுத் தப்பியோடிவிடுவார்களென்று அவர்கள் எண்ணுகின்றனரா? அவர்கள் எடுக்கும் முடிவு மிகத் தீயதே.**

இந்த வசனத்தின் மூலம், நடப்பவை அனைத்தும், மனிதகுலத்திற்கு பெருமளவில் தீங்கு விளைவிக்கும் வகையில் இத்தகைய தீயவிஷயங்களை செய்பவர்கள் இருக்கின்றார்கள் என்பதை அல்லாஹ் எனக்கு புரிய வைத்தான். அல்லாஹ்வின் தீர்ப்பிலிருந்தும் தண்டனையிலிருந்தும் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று அவர்கள் நினைக்கிறார்களா? அவர்கள் மனித குலத்திற்கு தீங்கு விளைவிக்க முயன்றபின் அல்லாஹ் அவர்களை காப்பாற்றுவானா? எத்தனை பேர் துன்பப்படுகிறார்கள் தெரியுமா? சிறிய வீடகளில் வாழ்வாதாரங்களில்லாமல் வாழும் எத்தனை ஏழைகள். நான் மொரீஷியஸை மட்டுமல்ல, உலகளாவிய நிலைமையைப் பற்றிதான் பேசுகிறேன். அதாவது உலகம் முழுவதும் நோய்வாய்ப்பட்ட பல மக்கள் தங்கள் மருத்துவ சிகிச்சையைப் பின்பற்றவும், மருந்துகளை எடுத்துக்கொள்ளவும் வெளியே செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தவறு செய்பவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அல்லாஹ் பார்க்கவில்லையா?

## சலாத்துல் பஜ்ருக்குப் பிறகு

இந்த வெளிப்பாட்டைப் பெற்ற பிறகு, நான் அதைப் பற்றி நிறைய சிந்தனை செய்தேன். ஏற்கனவே தாமதமாகிவிட்டதால் நான் இந்த விஷயத்தில் நீண்ட நேரம் பேச மாட்டேன். பஜ்ர் தொழுகையை தொடர்ந்து நான் துவாக்கள் செய்தபின், திருகுர் ஆனையும், ஹதீஸ்களையும் படித்த பிறகு, நான் திக்ரில் செல்ல தயாராகும்போது, அல்லாஹ் எனக்கு வெளிப்படுத்தினான், பின்வரும் வசனத்தின் மூலம் எனக்கு புரியவைத்தான்.

**குல்லு செய்யின் ஹலிக்கும் இல்லாவஜ்ஹக் லகுல்ஹுக்மு வா இல்லதி துர்ஜவூன்.**

**அவனைத் தவிர அனைத்தும் அழியக் கூடியவையே. தீர்ப்பு அவனுக்கே உரியது. மேலும் நீங்கள் யாவரும் அவனிடமே திருப்பப்படுவீர்கள்**

ஹுஸூர் (அலை) அவர்களின் விளக்கம் : இந்த செய்தி என்னை நடுங்க வைத்தது. நான் கவலைப்பட்டேன், நான் எனது ஆரோக்கியத்தை இழந்து விட்டேன் என்று வெளிப்படையாக உங்களுக்கு சொல்கிறேன். என் உடலை அடித்து நொறுக்கியது போல் உணர்ந்தேன். நானே கேட்டேன். மீண்டும் என்னை நிகழும்; என்ன அழிவு வரும்? அல்லாஹ் கூறுகிறான் அவன் முகத்தைத் (அவனைத்) தவிர அனைத்தும் அழிக்கப்படும். இந்த எல்லா வகையான தீய செயல்களுக்கும் முன் அல்லாஹ்

எவ்வளவு கோபமாக இருக்கிறான் என்பதை இது காட்டுகிறது. தீர்ப்பு அவனுக்கே உரியது, நீங்கள் யாவரும் அவனிடமே திருப்பப்படுவீர்கள்.

மனித குலத்திற்கு தீங்கு விளைவிப்பவர்கள், சக மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கும் மனதுடன் இருப்பவர்கள், அது நாடு மற்றும் உலக அளவில் இருக்கட்டும், அது குடும்ப மற்றும் தனிப்பட்ட மட்டத்தில் இருக்கட்டும், நீங்கள் எல்லா வகையான தீங்கும் செய்கிறீர்கள். வரவிருக்கும் அழிவு பற்றி நான் கேட்டபோது, அவன் முகத்தைத் (அவனைத்) தவிர அனைத்தும் அழிக்கப்படும் என்று தெரிவிக்கிறான். ஒருவர் இதைப் பெறுகிறார், இந்த உலகத்திற்கு என்ன நேரிடும் என்பதை அவர் அறிவார், மறுபுறம் பலர் இதை முக்கியத்துவமாக எடுத்துக்கொள்வதில்லை.

இந்த பேருரை மற்றும் நான் உங்களுக்கு வழங்கிய இச்செய்திகள் மூலம் நீங்கள் என் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று நான் கூறவில்லை. இதற்காக நான் உங்களிடம் சம்பளமும், இழப்பீடும், ஊதிய உயர்வும் கேட்கவில்லை. மாறாக நீங்கள் மனந்திரும்பி அல்லாஹ்விடம் செல்லுமாறு நான் உங்களுக்கு இறை செய்தியை மட்டுமே தருகிறேன். நாம் அனைவருக்கும் பலவீனங்கள் உள்ளன. **ஆகவே எல்லாம் வல்ல இறைவனின் பக்கம் திரும்பி, அவனிடம் மன்னிப்பு கேளுங்கள்; இந்த அழிவுகளை நம்மீது கொண்டு வர வேண்டாம் என்று அவனிடம் மன்றாடுங்கள். அவனுடைய கோபம் நம்மீது வரக்கூடாது. அல்லாஹ்வே, உன் கோபம் எங்கள் மீது விழுந்தால், நாங்கள் தூள்தூளாகிவிடுவோம்.** அல்லாஹ் நம் ஒவ்வொருவருக்கும் உதவி புரியட்டும். இன்ஷா அல்லாஹ்.

**Translated by:**

Naib Amir **Azim Ahmad**

**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***
**Ph No: 917502272774**